**தேசிய பாதுகாப்பு ஆய்வுகள் நிறுவகம், இலங்கை (INSS)**

**ஆய்வுப் பகுப்பாய்வாளர் பதவிக்கான விளம்பரம்**

| | |
|---|---|
| வேலை இலக்கம் | INSS/2016/023 |
| வேலைத் தலைப்பு | ஆய்வுப் பகுப்பாய்வாளர் |
| வேலை வகை | ஆய்வு அலுவலர் |
| பதவி எண்ணிக்கை | இரண்டு |
| அறிக்கையிடல் தொடர்புமுறை | பணிப்பாளர் நாயகம் / பணிப்பாளர் ஆய்வு மற்றும் பயிற்சி / இணை ஆய்வாளர் |
| சம்பளமும் ஏனைய ஊதியங்களும் | • ரூ. 55,000 (சகலதும் உள்ளடங்கலாக) |
| ஒப்பந்தம் | நிறுவகத்தில் சேர்ந்த திகதியிலிருந்து தொடக்க மூன்று மாதங்கள் தகுதிகூர் நிலையை உள்ளடக்கிய ஒரு வருட நிலையான காலத்திற்காக. இது செயலாற்றுகையில் எந்தவொரு உரிமையையும் வழங்காது. |
| வயது எல்லை | 40 வருடங்களுக்குக் கீழ் |
| கல்வி மற்றும் தொழிற் தகைமைகள் | **ஆகக் குறைந்த தகைமை**<br>ஆகக்குறைந்தது 2 வருட ஆய்வு அனுபவத்துடனான இளமாணிப் பட்டம் (பாதுகாப்புக் கற்கைகள் அல்லது சர்வதேச உறவுகள் பற்றிய பட்டத்திற்கு முன்னுரிமை வழங்கப்படும்)<br><br>**முன்னுரிமை**<br>• மேலுள்ளவை ஆகக் குறைந்த தகைமை ஆகும். நீண்ட ஆய்வு அனுபவத்தையும் சிறந்த கல்வித் தகைமையையும் கொண்ட பரீட்சார்த்திக்கு முன்னுரிமை வழங்கப்படும்.<br>• சிந்தனையாளர் குழாம், ஆய்வு நிறுவகங்கள் அல்லது பல்கலைக்கழகங்களில் சம்பந்தப்பட்ட வேலை மற்றும் ஆய்வு அனுபவத்தைக் கொண்டுள்ள பரீட்சார்த்தி |
| ஒட்டுமொத்த நோக்கமும் வகிபாகமும் | • தெரிவுசெய்யப்பட்ட நிலையத்தையும் நிறுவகத்தின் ஆய்வுக்கான நுணுக்கங்கள் மற்றும் முறையியல்களின் மேம்பாட்டிற்குப் பங்களிப்புச் செய்யும் யோசனைகளையும் கூட்டிணைப்பதுடன் தனக்கேயுரிய பிரதான ஆய்வுக்கு சரிமட்டமாக நிலையப் பணிக்கான குறிப்பிடத்தக்க முயற்சிகளை எடுப்பதற்கும் எதிர்பார்க்கப்படுகிறது. |
| வேலை விவரணம் | • பெருமகனாரால் திறனாய்வு செய்யப்பட்ட சஞ்சிகை ஒன்றில் ஒரு ஆய்வுக் கட்டுரையை முன்வைத்தலும் வெளியிடலும்<br>• பதவிக் காலத்தின்போது ஒரு கொள்கை / பிரச்சினையைச் சுருக்கமாக வெளியிடல்<br>• ஒவ்வொரு வருடமும் ஒரு வலைத்தள கருத்துரை / புத்தக மீளாய்வினை வெளியிடல்<br>• நிறுவகத்தில் இணையும்போது குறித்துரைக்கப்பட்ட வேலை விதிமுறைகளின்படி வலைத்தள கருத்துரைகள் மற்றும் பிரச்சினை / கொள்கையினை சுருக்கமாக வெளியிடல்<br>• நிலையம் / நிறுவகத்தின் ஆதரவின் கீழ் வட்ட மேசைப் பேச்சுக்கள், வேலைப்பட்டறைகள், செயலமர்வுகள், மாநாடுகள், கூட்டங்கள் போன்றவற்றை ஒழுங்கமைத்தல் |

| | |
|---|---|
| | • ஆய்வில் தான் கவனத்தைக் குவிக்கின்ற பரப்புடன் தொடர்புபட்ட ஆய்வு நடவடிக்கைகளை தனியாக முன்னெடுத்தல் |
| விரும்பப்பட்ட திறன் தொகுதி | • சம்பந்தப்பட்ட பரப்புகளுடன் தொடர்புபட்ட தேசிய மற்றும் சர்வதேச நடப்பு விவகாரங்களை பகுப்பாய்வு செய்வதில் மிகுந்த ஆர்வம்<br>• இளம் புலமையாளர்களுக்கு தலைமைத்துவத்தை வழங்குதல்<br>• மிகச் சிறப்பான தொடர்பாடல் மற்றும் உளப்பகுப்பாய்வுத் திறன்கள்<br>• விபரங்களைக் கவனிப்பதில் உள்ள ஆற்றல்<br>• கண்டிப்பான காலக்கெடுவினுள் பணியாற்றுதல்<br>• உயிர்ப்புடனான வேலை<br>• அணி வேலைக்கான இயல்திறன் |
| தேவையான ஆவணங்கள் | • முகப்புக் கடிதம்<br>• முழுமையான சுயவிபரம்<br>• பாட விடயம் மீதான ஆய்வின் நோக்கம், அதனுடன் சம்பந்தப்பட்டவை, ஆய்வு வினாக்கள் மற்றும் எழுத்தாண்மை மீட்டாய்வு போன்றவற்றைக் குறிப்பிட்டு ஆய்வு முன்மொழிவு ஒன்று (அதிகபட்சம் 1500 சொற்கள்)<br>• தங்களைப் பற்றிக் கூறக்கூடிய இருவரது கடிதங்கள். இதில் ஒன்று தற்போது பணி புரியும் நிறுவனத் தலைவரால் வழங்கப்பட வேண்டும். இக்கடிதங்கள், அக்கடிதங்களை வழங்கும் நபர்களால் வேறாக இரகசியத் தன்மையுடன் பணிப்பாளர் நாயகம், தேசிய பாதுகாப்பு ஆய்வுகள் நிறுவகத்திற்கு அனுப்பப்படல் வேண்டும்.<br>• வெளியிடப்பட்ட இரண்டு எழுத்தாண்மை மாதிரிகள் (நடுநிலைச் சஞ்சிகைகளில் ஆய்வுக் கட்டுரைகள்)<br>• வெளியீடு செய்த கட்டுரைகள் / புத்தகங்கள் / தனி நூல்களின் பட்டியல் |
| விண்ணப்பிக்கும் முறை | • ஆர்வமுள்ள பரீட்சார்த்திகள் தமது ஆவணங்களை மின்னஞ்சல் மூலமாக inss.srilanka@gmail.com என்ற முகவரிக்கு அனுப்பலாம்.<br>• விடயத் தலைப்பில் ''வேலை விண்ணப்பம் : ஆய்வுப் பகுப்பாய்வாளர்'' எனக் குறிப்பிடுக.<br>• மாற்றுவழியாக, விண்ணப்பப்படிவத்தை ''ஆய்வுப் பகுப்பாய்வாளர் பதவிக்கான விண்ணப்பம்'' என தெளிவாக தலைப்பிடப்பட்ட கடித உறையில் இட்டு, மேலதிக செயலாளர் (கொள்கை மற்றும் திட்டமிடல்), பாதுகாப்பு அமைச்சு, 15/5, பாலதக்ஷ மாவத்தை, கொழும்பு 03. என்ற முகவரிக்கு அனுப்ப முடியும். |
| விண்ணப்ப இறுதித் திகதி | • விண்ணப்பங்கள் 2016 யூன் 17 ஆந் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியதான அனுப்பப்படுதல் வேண்டும்.<br>• தபால் தாமதமடைதல் அல்லது இணையத்தில் காணப்படும் தொழினுட்பப் பிரச்சினைகள் போன்றவற்றிற்கு நிறுவகம் எந்த வகையிலும் பொறுப்பேற்காது. |

| | |
|---|---|
| தெரிவு நடைமுறை | • சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்களை மதிப்பீடு செய்ததன் பின்னர் பரீட்சார்த்திகளைக் கொண்ட குறுகிய பட்டியல் தயாரிக்கப்படும்.<br>• குறுகிய பட்டியலில் இடம்பெறும் பரீட்சார்த்திகள் தெரிவுக் குழு ஒன்றினால் நேர்முகப்பரீட்சைக்கு உட்படுத்தப்படுவர். அங்கு பரீட்சார்த்திகள் தமது முன்னைய வேலை மற்றும் எதிர்கால ஆய்வுத் திட்டங்கள் போன்றவற்றை முன்வைக்க வேண்டுமென எதிர்பார்க்கப்படுகிறது. |
| பொதுத் தகவல்கள் | • பரீட்சார்த்தி தற்போது அரசாங்கத் துறையில் அல்லது பல்கலைக்கழகங்களில் பணியாற்றி, அவர் நேர்முகப் பரீட்சைக்கான குறுகிய பட்டியலில் இடம்பெற்றால் நேர்முகப் பரீட்சைக்கு முன்பதாக / நேர்முகப் பரீட்சையின்போது அவரது வேலை தருநரிடமிருந்து பெற்றுக்கொள்ளப்படும் ''எந்தவித ஆட்சேபனையும் இல்லை'' என்ற சான்றிதழ் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.<br>• விளம்பரப்படுத்தப்பட்ட பதவிக்கான வெற்றிடத்தை நிரப்புவதற்கு அல்லது எதையாவது நிரப்பாது விடுவதற்கு அல்லது முழுமையாக நிரப்பாது விடுவதற்கு நிறுவகத்திற்கு உரிமை உண்டு.<br>• தெரிவுசெய்யப்பட்ட பரீட்சார்த்தியை 2016 யூலை 1 ஆந் திகதியளவில் இணைத்துக்கொள்ள எதிர்பார்க்கப்படுகிறது.<br>• விளம்பரத்தில் குறித்துரைக்கப்பட்ட ஆகக்குறைந்த தகைமைகளிலும் கூடிய தகைமைகள் மற்றும் அனுபவங்களின் அடிப்படையிலும் ஏனைய கல்விசார் அடைவுகள் மற்றும் கடந்தகால செயலாற்றுகை மீதான பின்னூட்டத்தின் அடிப்படையிலும் நியாயமானதொரு எல்லைக்குள் நேர்முகப்பரீட்சைக்கான பரீட்சார்த்திகளின் எண்ணிக்கையை மட்டுப்படுத்துவதற்கு நிறுவகத்திற்கு உரிமை உண்டு.<br>• குறித்துரைக்கப்பட்ட தகைமைகளுடன் பொருத்தமான பரீட்சார்த்திகள் கிடைக்காத பட்சத்தில், குறித்த துறையில் உள்ள அனுபவம் மற்றும் நிபுணத்துவத்துடன் தொடர்புபட்ட பதவிக்காக மிகப் பொருத்தமான பரீட்சார்த்தியைக் கண்டுபிடிப்பதற்கு குறித்துரைக்கப்பட்ட தகைமைகளைத் தளர்த்துவதற்கான உரிமையை INSS கொண்டுள்ளது.<br>• பரீட்சார்த்தி ஒருவர் நிறுவகத்தில் இணைந்து கொள்ளும் சந்தர்ப்பத்தில், அவர் நிறுவகத்தின் தகுதிவாய்ந்த அதிகாரியிடம் இருந்து எழுத்துமூல அனுமதியைப் பெற்றுக் கொள்ளாது ஏதாவது பகுதிநேர அல்லது முழுநேர நியமனம் அல்லது பாடநெறிக்காக விண்ணப்பிக்கப் போவதில்லை என்ற எழுத்துமூல உடன்பாட்டை வழங்குவதற்கு தேவைப்படுத்துகின்ற விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளை ஏற்றுக்கொள்ள வேண்டும்.<br>• தெரிவுசெய்யப்பட்ட விண்ணப்பதாரி, INSS புலமையாளர்கள் மற்றும் அலுவலர்களுக்கு ஏற்புடையதான ஏனைய விதிகள் மற்றும் ஒழுங்குவிதிகளுக்கும் கட்டுப்படுவார். |

- பட்டியலிடப்பட்ட பணிக் கடமைகள் மற்றும் பொறுப்புக்கள், வகிபாகத்தின் பொதுவான நிலமையை விளக்குவதற்கான நோக்கத்தைக் கொண்டுள்ளன. கடமைகள், பொறுப்புக்கள் மற்றும் வகிபாகத்தின் கூறுகளுக்கிடையேயான சமநிலை என்பன குறிப்பிட்ட நேரம் ஒன்றில் நிறுவனத்தின் தேவைகளை மாற்றுவதன் காரணமாக, மாறிவருகின்ற நிறுவனத்தின் தேவைகளின் மீது மாற்றமடையலாம் அல்லது மேலதிக காலத்தின்பால் வேறுபாடு அடையலாம்.